**மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், திருத்தணி**

**அ.வ.எண்.28/2018**

இந்நீதிமன்றத்து எழுத்தர் திருமதி B. கௌசல்யா அவர்களால் சத்திய பிரமாணம் செய்விக்கப்பட்டு வாதி தரப்பு 2ம் சாட்சியின் வாக்குமூலம் 1873 ஆம் ஆண்டு 10வது சட்டத்திற்கு உட்பட்டு இன்று 2025 ஆண்டு ஜனவரி மாதம் 7 ஆம் நாளில் பதிவு செய்யப்பட்டது.

| | | | |
|---|---|---|---|
| பெயர் | : யோகநாதன் | மதம் | : இந்து |
| த/பெ | : ராமசந்திரன் | ஜாதி | : -- |
| வயது | : 64 | கிராமம் | : சோளூர்பாளையம் |
| தொழில் | : ஓட்டுநர் ஓய்வு | வட்டம் | : பெங்களூர் |

**07.01.2025**
**வா.சா. 2 ன் முதல் விசாரணை**

**1.** நான் இவ்வழக்கில் வாதி தரப்பு 2ம் சாட்சியாக சாட்சியம் அளிக்கிறேன். என் தரப்பில் பிரமாண வாக்குமூலம் தாக்கல் செய்துள்ளேன். எனது பிரமாண வாக்குமூலத்தை நான் சொல்லித்தான் என்னுடைய வழக்கறிஞர் பிரமாண வாக்குமூலத்தை தயார் செய்தார். அதில் உள்ள விவரங்கள் எனக்கு நன்குத் தெரியும். பிரமாண வாக்குமூலத்தில் உள்ள கையெழுத்து என்னுடையதுதான். என்னிடம் காட்டப்படும் வா.சா.ஆ 1 கிரைய ஆவணத்தை நானும் என் தாயாரும்தான் எனது பெரியப்பா மகனான சங்கர் மற்றும் அவரது மகனுக்கு எழுதி கொடுத்தோம். வா.சா.ஆ 1 ஆவணத்தில் எழுதி கொடுத்தவராக உள்ள 2வது கையெழுத்துகள் என்னுடையதுதான். என்னுடன் என் தாயார் கைரேகைகள் வைத்துள்ளார்.

(குறுக்கு விசாரணை வழக்கறிஞர் வேண்டுகோளின்படி ஒத்திவைக்கப்படுகிறது)